தமிழ்நாடுதகவல்ஆணையம்
எண்.19, அரசுபண்ணைகிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டைமெட்ரோரயில்நிலையம்அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணைநாள் 01.07.2026**

**முன்னிலை**
திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநில தகவல்ஆணையர்

*****

**வழக்குஎண். SA 9537/H/2024**

B.K. புருஷோத்தமன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
மண்டலம் 2,
வேலூர் மாநகராட்சி,
வேலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 02.12.2023 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் வேலூர் மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு எண்.24, கதவு எண்.43, டி,வி.கே. நகர், 6-வது தெருவில் அவரது இல்லத்திற்கு சொத்து வரி மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் ஏன் சொந்த பயன்பாட்டிற்கு என்ற வகையின் கீழ் இல்லாமல் வணிக பயன்பாடு என்ற வகையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது சம்மந்தமாக தகவல்கள் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 19.07.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு B.K. புருஷோத்தமன் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத்தகவல் அலுவலர் | பொதுத்தகவல் அலுவலர் திரு G.அமர்நாத், கண்காணிப்பாளர், வேலூர் மாநகராட்சி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

**ஆணை**

இன்றைய (01.07.2026) விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 19.01.2024 மற்றும் 10.11.2025 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்கான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், தனது சொந்த வீட்டிற்கு சொத்து வரி செலுத்தும் போது அதற்குண்டான 3 சதவிகித தள்ளுபடி அளிக்கப்படாமல் வணிக பயன்பாட்டின் கீழ் தொகை செலுத்துமாறு கோரப்பட்டதற்கான விளக்கத்தினை பொது தகவல் அலுவலர் சரிவர வழங்கவில்லை என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மனுதாரர் 02.12.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள இனத்திற்கு முழுமையான தகவல்களை, மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக ஆணையத்திற்கு 04.08.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் முன்னாள் / இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்குஎண். SA 9537/H/2024</u>
<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
மண்டலம் 2,
வேலூர் மாநகராட்சி
வேலூர் மாவட்டம் - 632 009.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு B.K. புருஷோத்தமன்,
நெ 43, 6-வது தெரு,
டி.வி.கே நகர், Phase I,
சத்துவாச்சாரி,
வேலூர் - 632 009.

Copy to : File
VM/PA